கொண்டு வரப்படாமல், மன்னார்குடி சேமிப்புக் கிடங்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மறுபடியும் திருவாரூர் ஆலைக்கு வருகிறது. இதனால் ஏற்படுகிற போக்குவரத்து செலவு அதிகமாக ஆகிறது. அதைத் தவிர்க்க முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த மில்லில் தேவையான நெல்லை ஸ்டாக் வைப்பதற்கு இப்பொழுது அங்கே சேமிப்பு கிடங்குகள் இல்லை. அதையெல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை பூர்த்தியானவுடன் அந்த மில்லுக்குத் தேவையான நெல்லை அங்கேயே சேமித்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

** 266 கேள்வி—திரு. செ. மாதவன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—*

(அ) தென் மாநிலங்களிடையே உணவுப் பண்டங்கள் போக்குவரத்து பற்றியும், மிகுதியான உணவு தானியங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றியும் புதிய ஏற்பாடுகள் ஏதேனும் செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : இப்பொழுது இருக்கக்கூடிய உணவு மண்டல முறையை மாற்ற வேண்டும் என்ற கருத்தை மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனைக்குத் தெரிவித்திருக்கிறதா ? அப்படியானால் இந்த மாநில அரசாங்கம் ஆலோசித்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்த கருத்து யாது?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடிய கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நமது அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் ஒன்றும் கேட்கவில்லை.

திரு. செ. மாதவன் : சார், மத்திய, அரசு, சென்னை தனி மண்டலமாக இருப்பதானால், கேரளாவிற்கு அதிகம் அனுப்ப வேண்டும், ஆகவே, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்கிற யோசனையை மாநில சர்க்காருக்குத் தந்ததா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இன்னும் அதிக நெல் அல்லது அரிசி கொடுப்பதாக நாம் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி முடிவு எடுக்கவில்லை. தனி மண்டலத்தை ஒழித்து விடவேண்டும், மாற்ற வேண்டும் என்கிற பல கருத்துக்கள் ஆலோசிக்கப்பட்டன. கடைசியாக இப்பொழுது இருக்கும் நிலையே நீடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதை மத்திய சர்க்காரும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தியா ஒரு முழு நாடு, ஒருமைப்பாடு உடைய நாடு என்கிற கருத்து இருக்கின்ற நிலையில், மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம்

12th March 1966]

என்றெல்லாம் பிரிவு செய்து, அதனால், பல சங்கடங்கள், வீண் விரயங்கள், ஊழல்கள் பெருகுவதற்கு, துன்ப நிலைகள் மிகுவதற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை மனத்தில் கொண்டு, தேச பக்தியிலே எந்த மாநிலத்திற்கும் குறைவாக இல்லாத இந்த மாநிலம், மாநிலச் சர்க்கார், இந்த மாதிரிப் பிரிவை தகர்த்தெரிய முன்வர வேண்டும் என்பதை உணருகிறார்களா, இல்லாவிட்டால் இந்தக் கருத்தையொட்டி உடனடியாகச் செயல்பட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் கூறிய தேச பக்தியிலே, இந்தியா ஒன்றுபட வேண்டும் என்கிற கருத்தைப் பொறுத்தவரையில், சென்னை ராச்சியத்திலே உள்ள சர்க்காரும் அல்லது மக்களும் வேறுவிதமான கருத்து உள்ளவர்கள் இல்லை. உணவு வேண்டும், மக்கள் தேவை பூர்த்தியாக வேண்டும் என்பதை மனதில் கொண்டு, நிர்வாக ரீதியில் இவை செய்யப்படுபவையே ஒழிய, ஏக இந்தியா, ஒன்றுபட்ட இந்தியா என்பதற்கு இது முரண் என்பது ஒன்றும் இல்லை.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த உணவு மண்டல முறை இருப்பதால், நம் மாநிலம், கேரள மாநிலத்திற்கு அதிகமாக உணவு கொடுக்க ஒத்துக் கொண்டு இருக்கிறதா? அதற்கு ஈடு செய்ய ஆந்திராவிலிருந்து நம் மாநிலத்திற்கு அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டு இருக்கிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: எவ்வளவு நாம் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் இரண்டு வருஷத்திற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது. ஆந்திராவிலிருந்து ஒரு லட்சம் டன் நமக்கும், நாம் கேரளத்திற்கு இரண்டு லட்சம் டன்னும் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அந்தக் கருத்தை ஏற்று இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: அப்படி ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒப்புக் கொண்ட கருத்தை, மீண்டும் பரிசீலித்து அதிகப் படுத்த வேண்டும் என்று மத்திய அரசு கூறியதா? இந்தச் சர்க்கார் அதை ஏற்றுக் கொண்டதா?

கனம் திரு. வெ. ராமையா: அவர்கள் அதிகமாகக் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால், நாம் இருக்கும் நிலையைப்பற்றி விவரமாகச் சொல்லி, இப்பொழுது இருக்கக்கூடிய நிலையே நீடிக்க வேண்டும் என்று நம் கருத்தைச் சொல்லியிருக்கிறோம்.

Sugar Control

* 267 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of persons prosecuted for black-marketing in sugar during 1964; and

(*b*) the number among them convicted?